93—

தொழிற்பேட்டை

***52279—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர், மணவாசி மற்றும் சித்தலவாய் ஆகிய பகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்வழியில் நல்லாட்சி செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர், மணவாசி, சித்தலவாய் ஆகிய பகுதிகளில் அரசு புறம்போக்கு நிலங்கள் கண்டறியப்படவில்லை. எனவே, அப்பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்திணைகள் ஆளும் இறைவன்போல இருந்து இந்த அகிலத்தை ஆளும் வல்லமை பெற்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

2020 மார்ச் 13]

[*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு) தலைமை*]

கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், பத்து கிராம ஊராட்சிகளையும், இரண்டு பேரூராட்சிகளையும் உள்ளடக்கி உள்ளது. இப்பகுதி மக்கள் கொசுவலை தயாரித்தல், வாழைத் தட்டு தயாரித்தல், அரிசி உற்பத்தி ஆலை, வாசனைப் பொருட்கள் தயாரிப்பு ஆலை, தையல் தொழில் மற்றும் garments *போன்ற தொழில்கள் தொடங்குவதற்கு ஏதுவாக மணவாசி பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உறுதுணையாகவும், இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எஸ். வெள்ளாளப்பட்டியில் 26.63 ஏக்கர் பரப்பளவில் 26 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் மற்றும் 16 தொழில்மனைகளுடன் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை செயல்பட்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், மாயனூர், மணவாசி, சித்தலவாய் ஆகிய பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க, கரூர் மாவட்ட நிருவாகத்துடன் சிட்கோ நிருவாகத்தால் கலந்தோலோசிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட மாயனூர், மணவாசி, சித்தலவாய் பகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லையெனவும், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் வட்டத்திலும் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லையெனவும் கரூர் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் புதிய சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதனை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மணவாசி ஊராட்சிப் பகுதியில், சர்வே எண் 398, 400/1400/2 மற்றும் 258–களில் 150 ஏக்கர் நிலம் தரிசாக, விவசாயம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. இந்த நிலங்கள் யாவும் ஸ்ரீ திருமத்தியபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமானவை. இந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மணவாசி கிராமத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டில் மணவாசி பிடாரி அம்மன் கோயில் நிலம் புல எண் 194–ல் 10 ஏக்கர் நிலம் அறநிலையத் துறையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு, பொது மக்களுக்கு சமத்துவபுரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு, மக்கள் வசித்து வருகிறார்கள். எனவே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மணவாசியில் தொழிற்பேட்டை அமைக்க அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை அரசு கையகப்படுத்தி, தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பகுதியில் விதிகளுக்குட்பட்டு, புதிய தொழிற்பேட்டை தொடங்க போதுமான நிதியாதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும்,

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் முன்வரும் நிலையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில், அரசு புறம்போக்கு நிலங்களின் விவரம், தொழில்முனைவோர் தேவை போன்றவற்றின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.